Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

# The Majesty of Sangam Women

**Dr. L. Kumari Krishnaveni,** Assistant Professor of Tamil,
Sree Ayyappa College for Women, Chunkankadai, Kanyakumari, Tamilnadu, India.
**ORCiD: https://orcid.org/0009-0001-1476-5165**
**DOI: 10.5281/zenodo.14744639**

## Abstract

*Literature captures the normal life of people. The family is a long-standing social institution that instructs virtue in a society. Love is very important in this family system. In Agam literature, the ideal love is found between the hero (Thalaivan) and the heroine (Thalaivi). A life without love is like a lifeless body. We can see women being oppressed and enslaved at various levels. However, the Tamil people were very different in prehistoric times. In ancient times there was a woman-centered society. One can see that during the Sangam era, women faced the evil consequences with great courage and confidence regardless of any opposition. The pride of ancient Tamil women can be understood by learning about the courage of the female friend (Thozhi) in consoling the female friend (Thalaivi) when the hero (Thalaivan), who has been separated from the beloved (thalaivi). Due to the separation of the hero (Thalaivan), who does not return at the correct time, the love of the beloved (thalaivi) worries. Sangam women consider love and hospitality to be vital parts of their lives and the fact that the beloved (thalaivi) and the female friend (Thozhi) act with courage in the problems when they encounter in life. This paper traces the evidence of the majesty of Sangam women through the sources from the Sangam poems.*

Keywords: Hero, Heroine, Maid, Majesty, Friendship, Love, Trust.

References

[1] *Akananooru*. Kazhagaveliyeedu, Tirunelveli South Indian Saiva Siddhantha Book Publishing Association, 1970.
[2] Somasundaranar, P. V. *Pathuppattu.* Saiva Siddhanta Book Publishing Association, Chennai.
[3] Puliyurkesigan. *Kalithokai*. Saradha Publishing House, 2003.
[4] Puliyurkesigan. *Kurunthokai*. Saradha Publishing House, 1996.
[5] Puliyurkesigan.*Natrinai.* Saradha Publishing House, 2021.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

**Pandian Journal of Women's Studies**
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
**Volume 5, Special Issue 1 (1), January 2025** **E-ISSN: 2583-715X**

# சங்க கால மகளீரின் மாட்சிமை

**முனைவர் ல. குமாரி கிருஷ்ணவேணி,** உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
ஸ்ரீ ஐயப்பா மகளிர் கல்லூரி, சுங்கான்கடை, கன்னியாகுமரி, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0009-0001-1476-5165**
**DOI: 10.5281/zenodo.14744639**

**ஆய்வுச்சுருக்கம்**

*மக்களின் இயல்பான வாழ்க்கையை எடுத்தியம்புவது இலக்கியம். குடும்பம் என்பது நெடுங்காலமாக இருந்துவரும் ஒரு சமூக அமைப்பாகும். இந்தக் குடும்ப அமைப்பில் முக்கியமானது காதல். காதல் என்றால் அன்பு என்பது பொருள். அகப்பொருள் இலக்கியத்தில் தலைவன் தலைவியிடையே காணப்படுவது தலைசிறந்த காதல். ஒருவராலும் பிரிக்க முடியாத அன்பு. அன்பில்லாத வாழ்க்கை உயிரில்லா உடம்பைப் போன்றது. பெண்கள் பல்வேறு நிலைகளில் ஒடுக்கப்படுவதையும், அடிமைப்படுத்தப்படுவதையும் நாம் காணமுடிகிறது. ஆனால் வரலாற்றுக்கு முற்பட்ட மிகப் பழங்காலத்தில் மானிட இனம் மிகவும் வேறுவிதமாக இருந்துள்ளது. அப்பழங்காலத்தில் மகளிரை மையமாகக் கொண்ட சமூகம் இருந்துள்ளது. சங்க காலத்தில் பெண்கள் மனதைரியத்துடனும், நம்பிக்கையுடனும் தனக்கு ஏற்படும் விளைவுகளை எந்தவித எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் மனத்தின்மையுடன் எதிர்கொண்டதை இலக்கியங்கள் வாயிலாக நாம் காணமுடிகின்றது. சங்க இலக்கியங்களில் காதலும் கற்பும் ஒன்றாகவே காணமுடிகிறது. காதல் என்றால் உணர்ச்சி, கற்பு என்றால் ஒழுக்கம், கற்புடைய மாதரிடம் மென்மையும் உண்டு, மனத்திண்மையும் உண்டு. அதுபோல பொறுக்கும் திறமும், மாறுப்பட்டோரை ஒதுக்கும் திறமும் உண்டு. தலைவன் பொருள்வயிற் பிரிவதனால் பிரிந்த தலைவன் குறித்த காலத்தில் வராமல் காலம் தாழ்த்தும் போது தோழி தலைவியை ஆற்றுப்படுத்துவதில் தோழியின் நெஞ்சுரத்தையும், உடன்போக்கு போகும் தலைவியைக் குறித்து செவிலித்தாய் புலம்புவதிலிருந்து அவள் அன்பையும், பெண்கள் விருந்தோம்பலை தங்கள் வாழ்க்கையின் ஒரு பகுதியாகவே கொண்டுள்ளதையும், களவு காலத்திலும் சரி, கற்பு காலத்திலும் சரி தனக்கு வாழ்க்கையில் நேரிடும் பிரச்சனைகளைத் தலைவி தானே நெஞ்சுரத்துடன் செயல்படுவதையும் அறிந்து கொள்வதன் மூலம் பழந்தமிழ் பெண்களின் பெருமையை அறிந்து கொள்ளலாம்.*

**குறிப்புச்சொற்கள்:** தலைவன், தலைவி, தோழி, மாட்சிமை, நட்பு, அன்பு, நம்பிக்கை.

**முன்னுரை**

உலகமொழிகளில் வேறு எந்த ஒரு மொழிக்கும் இல்லா சிறப்பு தமிழ்மொழிக்கு உண்டு. அகம் புறம் பாகுபாடு வேறு மொழி இலக்கியங்களில் இல்லை. தமிழ்மொழிக்குச் சொந்தமான

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*
*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X



தமிழர்கள் பண்பாட்டு நெறியுடன் வாழ்ந்துள்ளனர். பண்பாடு மனித உள்ளத்தோடு தொடர்புடையது. மக்கள் கூடி வாழ்தலே இல்வாழ்க்கை. இல்லறம் செம்மையுற்றால் தான், நாட்டில் நல்வாழ்வு உண்டாகும். ஒரு சமூகத்தின் நாகரீகத்தை வெளிக்காடுவதும், உயர்த்துவதும் இல்லறமாகும். சங்க இலக்கியத்தில் இல்லற வாழ்க்கையில் அன்பு, விருந்தோம்பல், நம்பிக்கை போன்ற வாழ்க்கை நெறிகளில் வாழ்ந்த பெண்களின் மாட்சிமை வெளிப்படுவதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

**அன்பு**

காதல் என்றால் அன்பு என்பது பொருள். அன்பு என்பது ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் ஒரு முக்கியமான அம்சம். மனித வாழ்க்கைக்கு உன்னதத்தை அளிப்பது அன்பு. இந்த அன்பு பல செயல்களினால் ஒன்றோடொன்று இணைந்துள்ளது. இனிமையான மாலைநேரம். தலைவன் வரவை எதிர்நோக்கி இருக்கும் தலைவி, ஆல மரக்கிளைகளில் பறவைகள் ஓசை எழுப்புகின்றன. தலைவிக்கு அந்நிகழ்வு அவலமாகத் தோன்றுகிறது. அதுபோல தாமரைப் பூவானது கதிரவன் தோன்றும் போது மலரும்; மறையும் போது கூம்பும். இந்நிகழ்ச்சியானது தலைவியின் பக்கத்தில் தலைவன் இருக்கும் போது அவளுக்கு மகிழ்வாகவும், அவன் பிரியும் போது வருத்தமாகவும் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

**ஓர் இரா வைகலுள் தாமரை பொய்கையுள்**
**நீர் நீத்த மலர் போல நீ நீப்பின் வாழ்வாளோ (பாலைக்கலி., 5)**

இப்பாடலில் எப்போதும் தலைவன் தன்னுடனே இருக்க வேண்டும் என நினைக்கும் தலைவியானவள், அவன் பிரிவால் உண்டாகும் துன்பத்தை இயற்கையாகவே நடக்கும் ஒரு நிகழ்வுடன் ஒப்பிட்டுக் கூறுவதை அறியலாம். இன்பத்திலும், துன்பத்திலும் தலைவன் தனக்குத் துணையாக அமைவதையே தனது இன்பமாகக் கருதும் அன்பு மனம் உடையவளாகத் தலைவி விளங்குகிறாள்.

தலைவன் தலைவிக்கும் தலைவி தலைவனுக்குமே உரிமை உடையவர்கள். அவர்களின் காதல் எனும் அன்பினால் ஒருவரை ஒருவர் பிரியாமல் ஒற்றுமையாகக் காணப்படுவர். 'ஒரு பெண் தன் காதலனுடன் உடன்போக்கு போக, அவளைத்தேடிச் சென்ற செவிலித் தாயிடம் ஆறுதலாக அந்தணர் சிலர் கூறுவது. அதாவது, சந்தனம் மலையில் பிறந்தாலும் மலைக்கு அது சொந்தம் இல்லை; அதனைப் பயன்படுத்துபவருக்கே சொந்தம். அதுபோல முத்தானது சிப்பியில் தோன்றினாலும் அது சிப்பிக்குச் சொந்தம் இல்லை; அதனை அணிந்து கொள்பவருக்கே சொந்தம். யாழிலே இசை பிறந்தாலும் அந்த இசை யாழுக்குச் சொந்தம் இல்லை, அந்த யாழை மீட்டுபவருக்கே சொந்தம் என்பதைப்போல உன்னுடைய மகளும் அவளது தலைவனுடன் சென்று விட்டாள். அதனால் அவள் அவனுக்கே இனி சொந்தம்.

**பலவுறு நறும்சாந்தம் படுப்பவர்க்கு அல்லதை**

**மலையுளே பிறப்பினும் மலைக்கு அவைதாம் என்செய்யும்?**
**நினையுங்கானும் மகள் நுமக்கும் ஆங்கு அனையளே**
**சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க்கு அல்லதை**
**நீருளே பிறப்பினும் நீர்க்கு அவைதாம் என்செய்யும்?**
**தேருங்கானும் மகள் நுமக்கு ஆங்கு அனையளே**
**ஏழ்புணர் இன்னிசை முரல்பவர்க்கு அல்லதை**
**யாழுளே பிறப்பினும் யாழ்க்கு அவைதாம் என்செய்யும்?**
**சூழுங்கானும் மகள் நுமக்கும் ஆங்கு அனையளே (பாலைக்கலி., 8)**

இப்பாடலில் தலைவியானவள் திருமணம் முடிந்த பிற்பாடு தலைவனுக்கு மட்டுமே உரிமை உடையவளாக காட்டப்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல செவிலிக்கு தலைவிபால் காணப்படும் அன்பினையும் உணர்ந்து கொள்ளலாம்.

குழந்தைக்கு நிலாச்சோறு ஊட்டும் தாயை அகநானூறு பாடலில் காணலாம். குழந்தைக்கு நிலவைக் காட்டியும், அந்நிலவைப் பார்த்து நீ என் மகனுடன் விளையாட வந்தால் உனக்குப் பால் தருவேன் எனக் கூறி நிலவை அழைத்துத் தன் புதல்வனின் அழுகையை மறைப்பதை அறியலாம்.

**முகிழ் நிலாத் திகழ்தரும் மூலாத் திங்கள்**
**பொன்னுடைத் தாலி என் மகன் ஒற்றி**
**வருகுவை ஆயின் தருகுவென்பால் என (அகம்., 54)**

தலைவன் தலைவி பால் கொண்டுள்ள அன்பினைப் பார்க்கும் போது, தன் துணைவியை வர்ணிக்கிறான். அதாவது தலைவியானவள் குளிர்ச்சியான கண்ணினையும், மூங்கிலை ஒத்த பருத்த தோள்களையும் கொண்டு, மொத்தத்தில் தெய்வ மகள் போல் காணப்படுவாள் என மனதில் வர்ணிக்கிறான்.

**அரிமதர் மழைக்கண் அமைபுரை பணைத்தோள்**
**அணங்குசால் அரிவையைக் காண்குவம் (அகம்., 114)**

என்பது பாடல். இப்பாடலில் தலைவியின் பெருமைகளைத் தலைவன் கூறுவதைக் காணலாம்.

தந்தை மகள் பாசம் உன்னதமானது. தந்தையின் உணவு விருப்பத்தை அறிந்து தந்தைக்காக விரும்பி உணவு சமைத்துப் பரிமாறும் மகளைப் பற்றிய செய்தியை, கடலில் இறால்மீன் பிடித்து வரும் தந்தைக்கு உப்பை விற்று வாங்கிய நெல்லை அரிசியாக்கி சமைத்த சோற்றில் அயிரைமீன் குழம்பை ஊற்றிப் பரிமாறும் மகளின் அன்பை உணரமுடிகிறது.

**நெடுந் திமில் தொழிலொடு வைகிய தந்தைக்கு,**
**உப்பு நொடை நெல்லின் மூரல் வெண் சோறு**
**அயிலை துழந்த அம் புளிச் சொரிந்து**
**கொழுமீன் தடியொடு குறுமகள் கொடுக்கும் (அகம்., 60)**

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

என்பது அப்பாடல். அகத்திணை இலக்கியத்தில் தலைவிக்கு மட்டுமல்ல தோழிக்கும் சிறப்பான இடம் உண்டு. தலைவியின் நன்மையை மட்டுமே கருத்தில் கொள்பவள் தோழி. அவ்விதம் தோழி தலைவனிடம் கூறுகிறாள் தலைவியானவள் நின் பிரிதல் தன்மையைத் தாங்குவதற்கு வலிமையற்ற மென்மை தன்மை உடையவள். நின்பால் நிறைந்த அன்பும் உடையவள். உன்னைப் பிரிந்து ஆற்றியிருப்போம் என்ற அறிவும் இல்லாதவள். அதனால் நனிபேதவைமையை பிரியாது இருப்பாயாக எனக் கூறி அவனைச் செலவழுங்குவிக்கிறாள்.

**தளிரேர் அன்ன தாங்கரு மதுகையாள்**
**மெல்லியள் இளையள் நனிபேர் அன்பினன்**
**செல்லேம் என்னும் நும்மெதிர்**
**ஒழிவேன் என்னும் ஒண்மையோ கலனே (அகம்., 319)**

எனும் பாடலால் அறியலாம்.

சங்க காலப் பெண்கள் தங்கள் குடும்பம் வறுமையில் வாடினாலும் புலவராகிய தன் தலைவன் கொண்டு வரும் பொருள்களை, அவர் கூறிய சொல்லை மீறாமல் கிடைத்த பொருள்களைத் தனக்காகப் பாராமல் எல்லோருக்கும் ஈத்துவக்கும் பண்பினைக் கொண்டவர்களைக விளங்கியுள்ளனர். பெண்களின் கருணை உள்ளத்தை இதைவிடச் சிறப்பாக எடுத்துக்காட்டக் கூடிய இலக்கியம் வேறு இல்லை.

தோழி தலைவியின் உயிராவாள். அதனால் தன் தலைவி எத்தகைய இன்னலிலும் ஆழ்படாமலும், எந்த விதமான துன்பங்களும் அவளை அணுகாமல் தலைவியின் இன்பத்திலும் துன்பத்திலும் சமபங்கை அனுபவித்து கடைசி வரை தலைவிக்காகவே வாழ்பவள் தோழி. தலைவன் தலைவியை விட்டுப் பிரிய நேர்ந்தால் அப்பிரிவாற்றாமையால் தலைவி இறந்தே போய்விடுவாள் என அஞ்சிய தோழி, "செயல் ஆற்றலை விரும்பி நீ பிரிந்து சென்றால் இவள் உயிரை விட்டுவிடுவாள்" (பாலைக்கலி) என்று தலைவியின் நிலையினைத் தலைவனிடம் எடுத்துக் கூறி அப்பொழுதே தலைவனது நெடிய பயணத்தைத் தடுத்து விடுகிறாள்.

**வினை வெஃகி நீ செலின் விடும் இவன் உயிர் என**
**புனையிழாய் நின்நிலை யான் கூற, பையென (பாலைக்கலி., 9)**

இதில் தோழி தலைவியின் உண்மை நிலையினை அறிந்து தலைவன்பால் எடுத்துக்கூறி தலைவி பால் தனக்கு இருக்கும் உண்மை அன்பை வெளிப்படுத்துகிறாள்.

தலைவியின் களவுகால வாழ்கையிலும் சரி, கற்பு கால வாழ்க்கையிலும் சரி, எப்போதுமே தலைவிக்கு துணையாக நிற்பவள் தோழி. களவுகாலத்தில் நினைப்பிரியேன் என்று கூறிய தலைவன் இப்போது உனைப்பிரிவேன் என்கிறான். இவ்விதம் பேச்சுமாறும் பண்புடைய தலைவனிடம் தலைவியினது நலனை மனதில் கொண்டு வாதாடுகிறாள்.

**பகல் முனி வெஞ்சுரம் உள்ளல் அறிந்தேன்**
**மகன் அல்லை மன்ற (பாலைக்கலி., 18)**

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

தோழி தலைவியின் மேல் கொண்டுள்ள உரிமையால் தலைவனை நோக்கி எமைப் பரிந்து போகத் துணிந்து விட்டாய். அதனால் "நீயோர் நல்ல ஆண்மகனே இல்லை" (பாலைக்கலி) எனக் கூறும் அளவிற்கு தலைவி மேல் பாசம் கொண்டுள்ளாள் என்பதை அறியலாம்.

தலைவியை மறந்து சிலகாலம் பரத்தையர் பால் ஈடுபட்டிருந்த தலைவன் பரத்தையை விட்டுவிட்டு மீண்டும் தலைவியின் இல்லம் தேடி வருகின்றனான். அவ்விடத்தே தோழியைக் கண்டு வாயில் நேர்ந்து தலைவியிடம் சேர்த்து வைக்குமாறு கூறுகிறான். ஆனால் தோழியோ தலைவன் செய்த தவற்றை எடுத்துக் கூறி நின் தலைமை பண்பு என்பதெல்லாம் இது தானோ? எனவே நீ இவ்விடத்தை விட்டுப் போய் விடு. உன்னை நாங்கள் ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்று கூறுகிறார்.

**நெல்லுடை மறுகின் நன்னர் ஊர,**

**இதுவா மற்றுநின் செம்மல்? (அகம்., 306)**

இதில் தலைவன் தலைவியை விட்டுப் பிரிந்து பரத்தை பால் சென்றதால் தலைவி கோபத்துடன் இருப்பதுடன், தலைவன் மேல் வெறுப்பையும் கொண்டுள்ளான். இதனால் தோழியிடம் தலைவன் வாயில் நோரும் போது தலைவியின் உள்ளமாகிய தோழி தன் தலைவயின் விருப்பத்தையே தன் விருப்பமாகக் கொண்டு வாயில் மறுப்பதுடன், இவ்விடத்தை விட்டே போய்விடு என விரட்டி விடுவதையும் காணலாம். தலைவன் தவறு செய்தால் தலைவி மட்டுமல்ல தலைவியின் உயிராகிய தோழியும் தலைவனை எதிர்த்து நிற்பதை அறியலாம்.

இளவேனில் காலம் தொடங்கவும் வந்து விடுவேன் என்றவன் இளவேனில் வந்த பின்னரும் வரவில்லை. தலைவி துடிதுடித்தப் புலம்புகிறாள். உடனே தோழி, நம் தலைவன் சொன்ன சொல் தவறாதவன். உன்னால் இகழப்பட்டவன் உனக்கு உயிர் தர வந்துவிட்டான். ஆனால் உங்கள் இருவர் நிலையும் நினைத்து என் உள்ளம் தான் வேதனைப்படுகிறது. யாகம் செய்பவரின் வேள்வித் தீயிலிருந்து கிளம்புகின்ற செந்தீயைப் போல என் உள்ளம் மூண்டு எழுகின்ற வெப்பத்தால் வேகின்றது என்கிறாள்.

**நாள் அணி சிதைத்தலும் உண்டு என நயவந்து**

**கேள்வி அந்தணர் கடவும்**

**வேள்வி ஆவியின் உயிர்க்கும் என்நெஞ்சே (பாலைக்கலி.,35)**

இதில் தோழியானவள் தலைவியின் நிலைமட்டுமல்ல தலைவனது நிலையும் கண்டு மனம் வெதும்புகின்றாள். தோழி இருவர் பாலும் கொண்டுள்ள அன்பின் ஆழத்தை அறியலாம்.

**விருந்தோம்பல்**

பண்டைத் தமிழருக்கே உரிய தனிப்பண்பு வீட்டிற்கு வரும் விருந்தினரை இன்முகம் காட்டி, வரவேற்று இன்சொல் கூறித் தம்மிடம் உள்ளதை ஆர்வமுடன் பகுத்துக் கொடுத்து மகிழ்வது. இந்தச் செய்கையானது சங்க காலம் தொட்டே பெண்களுக்கே உரித்ததாக இருந்துள்ளமையை அறியலாம்.

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

தேரில் விரைந்து தலைவியைக் காண வருகிறான் தலைவன். தேரைச் செலுத்திய தேர்ப்பாகனின் தன்மையைப் பாராட்டி மகிழ்ச்சியுற்ற தலைவி தலைவனையும், தேர்ப்பாகனையும் வீட்டின் உள்ளே அழைத்து விருந்து கொடுத்தாள். இதை,

**உரைமதி வாழியோ வலவ என தன்**
**வரை மருள் மார்பின் அளிப்பனன் முயங்கி**
**மனைக் கொண்டு புக்கனன் நெடுந்தகை**
**விருந்து ஏர் பெற்றனள் திருந்திழையோளே (அகம்.,384)**

எனும் பாடலால் அறியலாம்.

மக்கள் உயிர் வாழ உணவு மிக அவசியம். தமிழர்கள் உணவில் அறுசுவை உணவை உண்டனர். இந்த உணவை அறுசுவையாக மாற்றுவது பெண்களே. ஆயர்கள் எருதுகளை மேய்ச்சலுக்காகக் கொண்டு போகும் போது அவர்களுக்கான உணவை புளி சாதமாகச் செய்து மூங்கில் குழாயில் அடைத்து எருதுகளின் கழுத்தில் கட்டி விடுவார்களாம் பெண்கள். இதை,

**…காவலர்**
**மழவிடை பூட்டிய குழாஅய்த் தீம்புளி**
**செவி அடை தீரத் தேக்கிலைப் பருக்கும் (அகம்., 311)**

என்பதால் அறியலாம். விருந்தோம்பல் என்பது பண்டைய தமிழர்களின் தலையாய பண்பாடாகும். வீட்டில் வரும் விருந்தினர்களை முகம் மலர உபசரிப்பது என்பது சாதாரண செயல் இல்லை.

அகப்பொருள் இலக்கியத்தை எடுத்துக் கொண்டால் ஒவ்வொரு நிலத்திற்கேற்ப விருந்தோம்பல் உணவின் தன்மையும் மாறுபடும். வேட்டுவப் பெண்கள் மலையில் இருந்து கொண்டுவந்த பொருள்களை மூங்கில் குழாயினுள் ஊற்றி நீண்ட நாள் புளிக்கலைத்த கள்ளையும் மூங்கில் அரிசி சாதத்துடன் இறைச்சி வகைகளையும் சேர்த்து உண்ணக் கொடுத்துள்ளனர். அதுபோல இடையர்குலப் பெண்கள் தங்கள் இல்லம் நோக்கி வரும் விருந்தினர்களுக்கு வேற்றிடம் சென்று மேய்த்து வந்த பசுக்களின் இனிய பாலினைக் கொடுத்து உபசரித்துள்ளனர்.

**வேறுபுலம் படர்ந்த ஏறுடை இனத்த**
**வளையான் தீம்பால் மிளைசூழ் கோவலர்**
**வளையோர் உவப்பத் தருவனர் சொரிதலின் (மலைபடு., 408-410)**

எனும் வரிகளால் அறியலாம். பழந்தமிழர் பெண்கள் விருந்தோம்பல் பண்பில் சிறந்து விளங்கினர். விருந்து செய்வதற்காக மக்கள் தங்கள் இல்லத்தின் முன்புறத்தில் திண்ணையை அமைத்திருந்தனர். இரவு நேரத்தில் வந்து தங்குவோர்க்கு முகமலர்ச்சியுடன் உணவு கொடுத்துள்ளனர். இரவு கதவடைக்கும் முன்பாக விருந்தினர் யாரேனும் திண்ணையில் உள்ளனரா எனப் பார்த்த பின்னரே கதவடைத்துள்ளனர்.

**Pandian Journal of Women's Studies**
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
**Volume 5, Special Issue 1 (1), January 2025** **E-ISSN: 2583-715X**

**பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர்**
**வருவீர் உளீரோ (குறுந்., 18)**

விருந்தினர் ஒரு நாள் மட்டமல்ல பலநாள் பலபேருடன் சென்றாலும் முதல் நாளைப் போலவே இன்முகம் காட்டி வரவேற்று விருந்தளித்துள்ளனர். அதுபோல முகக்குறிப்பறிந்து வேண்டியவற்றை வழங்கும பண்பை உடையவர்களாகக் காணப்பட்டனர் தமிழகப் பெண்கள்.

**நம்பிக்கை**

பழந்தமிழ் இலக்கியங்கள் பண்டைய மக்களுடைய பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் போன்றவற்றை விளக்குகின்றன. நம்பிக்கை என்பது சகுனம் - நிமித்தங்கள் வாயிலாகவும் வெளிப்படுவதுண்டு. சகுனம்- நிமித்தமாக இருந்தாலும், அச்சத்தின் காரணமாக உருப்பெற்று மக்களிடையே நம்பிக்கையாக நிலைபெற்றது. தலைவியானவள் தலைவனுடைய வரவினை எதிர்நோக்கி இருக்கும் போது பல்லி சொல்லும் நிமித்தத்தைக் கணக்கிட்டு, தலைவன் வந்து விடுவான் என்ற நம்பிக்கை கொள்கிறாள். **"பாங்கர் பல்லி படுதொறும் பரவி" (அகம்., 9)** பண்டைக்காலம் முதல் மனிதன் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை வாழ்ந்து வருகிறான். இயற்கையின் மாறுதலுக்கேற்ப மனித மனமும் மாறுபடுவதுண்டு. இயற்கையோடு இயைந்த மனிதன் வாழ்க்கையில் நம்பிக்கையும் தோன்றலாயிற்று. அகப்பாடல் நோக்கின் தலைவி தலைவன் பால் அதீத நம்பிக்கை வைத்திருப்பதைக் காணலாம். தனது தலைவன் தனக்கு மிகவும் இன்றியமையாதவர். நிலைமை தவறாத வாய்மையுடையவர், என்னை விட்டுப் பிரிந்து செல்வதை ஒரு போதும் நினையாதவர். தாமரையின் குளிர்ச்சியான தாதினையும், மேலோங்கிய சந்தனத்தின் தாதினையும் ஊதி அந்தச் சந்தன மரத்தில் வைத்த இனிய தேன் போலத் திண்ணமாக உயர்ந்து விளங்குபவன் எனத் தலைவி நம்பிக்கை கொள்கிறாள்.

**நின்ற சொல்லர் நீடுதோன்று இனியர்**
**என்றும் என் தோள் பிரிபு அறியலரே'**
**தாமரைத் தண் தாது ஊதி மீமிசைச்**
**சாந்தில் தொடுத்த தீம் தேன் போல (நற்., 1)**

என்ற பாடலில் தலைவியின் நம்பிக்கையை அறியமுடிகிறது.

தலைவன் தலைவியை விட்டுப் பிரிந்துள்ளான். அவன் வரவின் காலம் நீண்டது. ஊரார் அவர் கூறத் தொடங்கிவிட்டனர். தலைவி தன்னுடைய காதலை ஒளிவு மறைவு இல்லாமல் ஏற்றுக் கொண்டு, ஊராரின் பழிச் சொல்லை செவி சாய்க்காமல் உறுதியாகத் தலைவன் தனனை மணம் முடித்துக் கொள்வான் என்ற நம்பிக்கையுடன் இருப்பதை அறியலாம். அதுபோல தோழி தலைவியிடம் நாம் இங்கே துன்பமிகுதியால் வருந்தியிருக்க, நம்மை பிரிந்து துணிச்சலாகத் தலைவன் தனித்து வாழ முற்பட்டு விட்டான் என்று கூற, அதற்கு தலைவி தோழியே தலைவன் பயம் நிறைந்தவன். அவனால் கொடிய பாலை நிலத்தின் வழியே செல்லுதல் என்பது இயலாது. சுரமானது புழுதிக்காற்று வீச, யானையும், புலியும் வாழ, பனி

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

உறைந்த உச்சியை உடைய பல மலைகள் கடந்து தலைவன் போவாரா? உறுதியாகப் போகமாட்டார் எனத் தலைவி நம்பிக்கையுடன் மொழிகிறாள். மனித வாழ்க்கை நம்பிக்கையைச் சார்ந்தே நிலை பெற்றுள்ளது. இந்நம்பிக்கைகள் பழக்கவழக்கங்களுடன் நெருங்கிய தொடர்புடையனவாகக் காணப்படுகின்றன. சங்க இலக்கியத்தில் பண்டையத் தமிழர்கள் நிமித்தம் பார்த்ததானச் செய்திகளைக் காணலாம். இந்த நிமித்தம் பார்த்தாலும் நம்பிக்கையின் பார்ப்பட்டதாகக் காணலாம். தலைவன் வினைவயிற் பிரிந்து சென்றுள்ளான். தலைவன் நினைப்பில் அவன் வருகை குறித்து நன்னிமித்தம் வேண்டி பல்லியைப் பரவுகின்றாள்.

**ஓங்கிய நல்இில் ஒருசிறை நிலைஇ**
**பாஸ்கர் பல்லி படுதொறும் பரவி**
**கன்றுபுகு மாலை நின்றோள் எய்தி (அகம்., 9)**

என்ற பாடலால் அறியலாம். அதுபோல தலைவனைப் பிரிந்திருக்கும் தலைவி, அவன் வரவை எதிர்நோக்கி இருக்க மாலைநேரத்தில் பெண்கள் இறைவனுக்கு நெல்லையும் மலர்களையும் தூவி நிமித்தம் பார்க்கின்றனர். தங்கள் காதுகளில் கேட்கும் நல்ல சொற்களையே நல் நிமித்தமாகக் கொள்கின்றனர். தை விரிச்சி கேட்டல் என்றும் கூறுவா. இவ்விதம் பழந்தமிழர் பெண்கள் நம்பிக்கைகள் பலதரப்பட்ட வகைகளில் இருந்ததாகக் காணலாம்.

**முடிவுரை**

அன்பின் வெளிப்பாடே மனிதநேயமாகும். வாழ்வியலின் அடிப்படை அன்பே. மனித வாழ்வு வளமாக அமைய வாழ்வியல் நெறிமுறைகள் இன்றியமையாததாகும். பழந்தமிழர் பெண்களின் வாழ்வு போற்றத்தக்கதாய் இருந்தது. அவர்கள் பண்பாடு மிக்கவர்களாகவும், நற்குணங்களைக் கொண்டவர்களாகவும் விளங்கினர். தமிழர்கள் விருந்தோம்பல் பண்பிலும் சிறந்து விளங்கியுள்ளனர். வறுமையிலும் மறறவர்களுக்குக் கொடுத்துண்ணும் வழக்கம் காணப்பட்டது. தலைவனுக்கும் தலைவிக்கும் இடையே தோழியானவள் அவர்களின் நலனில் அக்கறை கொள்பவளாகக் காணப்படுகிறாள். பெண்கள் கணவன் பாலும், தங்களது வாழ்க்கை மேலும் மிகுந்த நம்பிக்கை கொண்டவர்களாகக் காணப்பட்டனர். சங்க இலக்கியத்தில் தோழியின் நெஞ்சுரத்தையும், செவிலித்தாய் அன்பையும், வாழ்க்கையில் தலைவி தானே நெஞ்சுரத்துடன் செயல்படுபதையும் அறிந்து கொள்வதன் மூலம் பழந்தமிழ்ப் பெண்களின் பெருமையைத் தெரிந்து கொள்ளலாம்.

**குறிப்புகள்**

[1] *அகநானூறு*. கழகவெளியீடு, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1970.
[2] சோமசுந்தரனார், பெ. வே. *பத்துப்பாட்டு*. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

[3] புலியூர்க்கேசிகன். *கலித்தொகை*. சாரதா பதிப்பகம், 2003.

[4] புலியூர்க்கேசிகன். *குறுந்தொகை*. சாரதா பதிப்பகம், 1996.

[5] புலியூர்க்கேசிகன். *நற்றிணை*. சாரதா பதிப்பகம், 2021.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் [https://creativecommons. org/licenses/by/4. 0/](https://creativecommons.org/licenses/by/4.0/) கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.